சபா. ஜெயராசா

# ஊர் வீதி



# ஊர் வீதி

சபா. ஜெயராசா

கனகசபை பொன்னுத்துரை
நினைவு வெளியீடு
இணுவில்
1979

UOOR VEETHY

By:
SABA JAYARAJAH

**First Edition - 1979**

**Publisher :**
**Pon. Santhiralingam**

Printed at:
**Vijaya Press,**
**Colombo-12.**

Price Rs. 4/-

# இவ்வெளியீடு . . . .

இன்றைய தமிழ்க் கவிதைகளைப் புத்திசீவிகள் மட்டத்திலிருந்து பொதுமக்கள் மட்டத்துக்கு அகல விரித்து, வேகமான உள்ளடக்கப் பொலிவுடனும், வனப்புடனும் வளர்த்து வருபவர் திரு. சபா. ஜெயராசா, அவரின் கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து, ''ஊர் வீதி'' என்ற இந்நூலை வெளியிடுவதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேம்.

பொன். சந்திரலிங்கம்

## பாண்காரன்

எங்கள் கிராமத்துப்
புதிய பதிப்புப் புத்தகத்தின்
பக்கங்கள்கள் புரண்டன
காலை விழித்தது.

உறையுட் கிடந்த
காகிதமான
அயர்ந்த நித்திரை
உடைப்புக் கண்டது.

வீதியில் நிழல்கள்
அங்கு மிங்கும்
அசையத் தொடங்கின.

இடை வெளி நிரப்பும்
பரீட்சை போலக்
கீறல் விட்டுக்
கிடந்தது வெய்யில்

சீட்டுக் கட்டுகள்
சிந்திய விதத்திற்
சிறு சிறு வட்டப்
பலாவிலை வீழ்ந்தது.

ஓ! பாண்காரனே
உனக்காக

எங்கள் கிராமத்துக்
கதவுகள் திறந்தன
காலைகள் காத்துக்
கிடக்கின்றன—

பார் பார்
பார மிழுக்கும் வண்டிகள்
தெருவிற்
கீறல் பதித்துப்
போவதைப் பார்.

## குடங்கிய தென்னை

நீரில் நனைந்த
கோழிக ளாகி
தினைவும் நனைந்தது.
சிறு வயதுள்ளே
தோய்ந்தது.

பொழுதுசாய
எங்களூரிற்
புகையிலை காய்ச்சும்
புகைமணம் பரவும்

ஊமலும் கொச்சியும்
வேகும் நெருப்பிற்
புகையிலை வெந்து
புதுமணம் பரவும்,

ஆடிலின் கரையிற்
குடங்கிய தென்னை
தூறல் மழையிற்
சிணுங்கும் ஓலை

கூனல் முதுகுடன்
குடிலைப் பார்த்துக்
காவல் செய்வோர்

வெற்றிலை கிழித்துச்
சப்புத லோடு
நித்திரை யில்லா
நீண்ட வுழைப்பு
நிசியிற் கரையும்

இன்றும் - அந்தக்
குடிலும்,
குடங்கிய தென்னையும்,
கூனல் மனிதனும்,
எங்க ளூரின்
இறவா வரங்கள்

## கிழங்கும் எலிகளும்

புதுப் புது எண்ணம்
மினுக்கிய தரையிற்
சுருக் கெழுத்தாகத்
துளி நிழல் வீழ்ந்தது.

புழுக்கம் எழுந்து
புவித்தரை யெங்கும்
புதிய பதிப்புச்
செய்திகள் தந்தது.

அடுக்கடுக்காக
அமைந்த பனைகள்
அந்தர வெளியிற்
கொய்யகங் கட்டின.

எத்தனை காலம்
இழந்த கனவுகள்
புத்துயிரடைந்து
பூமியில் நடக்கும்
வித்தையை விளங்கிய
புதியனாய் வந்தான்.

கிழங்கை அரிக்கும்
கீழ்நில எலிகள்
சுரங்கப் பாதையிற்
சுறுசுறுப் படைந்தன.

## நாங்கள்

முருங்கை மரமே
முருங்கை மரமே
ஏழைகள் எமது
கற்பக தருவே

அனல் மடைதிறக்கும்
அக்கினிக் கோடையில்
வெண்மலர் தூவி
விரிப்பாய் சிரிப்பை

விக்கி விக்கி
வந்திடும் மாரியில்
எங்களில் ஒருவனாய்
நின்றும் இருந்தும்
பூத்தும் காய்த்தும்
இயங்குதல் செய்வாய்.

நீயும் நாமும்
வேகமாய் வீசும்
காற்றுச் சுழலை
ஏற்கவும் எதிர்க்கவும்
ஆற்றலைப் பெறுவோம்

## முட்டைபோல் மௌனம்

புதிய புதிய
சுவ ரொட்டிகள்
பழைய மதிலிற்
பாயும் போது
சோர்வும் விதியும்
போர்வை யிட்டன.

எங்கள் கிராமம்
மௌன மிருக்கும்.

பாரம் வந்து
குமைந்து நோக
மௌனம் வந்து
போர்வை விரிக்கும்

உறக்க நாதம்
ஊதிய போதும்
பாரவண்டிகள்
படுக்கை யின்றிப்
புரண்டு புழுங்கும்.

இரவும் பகலும்
வழுக்கி நகர
இடருங் கஞ்சியும்
இணைந்து செல்லும்

எங்கள் கிராமம்
முட்டை போன்று
மௌன மிருக்கும்

## ஊர்க்கவிஞன்

கவிஞனே உன்னைக்
காண வந்தேன்.
உன்னைச் சூழ்ந்து
தூண்டா மணி விளக்கின்
சுடர்விட்ட ஏக்கங்கள்.

சுவரெங்கும் இருள்விட்டுத்
தாவணி விரித்துச்
சலசலக்கும் ஒட்டடைகள்.

அழகை ரசிக்கும்
தொழிலொன்று வந்ததனால்
கறை கூட அழகென்று
நீ கண்டாய்!

அழகென்ற நிர்வாணச்
சிற்பத்தைப்
பேனாவாற் கடைந்தெடுத்தாய்
அதன் மீதும்
கண்ணாடிக் கிறுக்கலெனச்
சிலந்திவலை படர்கிறது.

அப்பாலுக் கேகி
மோனத்தின் நிழல்களென
சதையற்ற கூடுகளைப்
படைக்கின்றாய்.

அவை கூட
அழகென்று ரசிக்கின்றாய்.

உன்வழியில் வராதவனை
அழகறியா மூளியென
அலட்சியமாய்ப்
பார்க்கின்றாய்.

அணு வணுவாய்
உழைத்துடலை
இழக்கின்றேன் முன்னிலையில்
நீ படைக்கும் பாத்திரங்கள்
விழி நீராய்

கண்ணாடித் துண்டுகளாய்
வீழ்கின்றன.

## தெருக்கரைமடம்

காய்க்க மறந்த
மாமரம் ஒன்று
தூங்கி வளிந்த
திண்ணை முகப்பில்
தெருக்கரை தழுவி,
நின்றதோர் மடத்திற்
குறுக்கும் நெடுக்கும்
ஓடிய சிலந்தி
ஓடுகள் குனிந்து
கோடுகள் வரையும்.

இருமிச் செருமி
இருந்த ஒருவர்
அத்த நாள் ஞாபக
அழகுக் குவியலைச்
சொல்லுச் சொல்லாய்ச்
சித்திர மாக்கினர்—
இழந்த நாட்களில்
ஏக்கங் கசிந்தது.

கசங்கிய வேலிகள்
காவல் காக்கும்
ஒழுங்கைகள்
மௌனமாய் இருக்க
ஓரிரு வீடுகள்
அடுக்கு மாடியாய்
உயர்ந்தன

## பசுமை

வேப்பம் பழங்கள்
பொத்துப் பொத்தெண்டு
விழுந்து கிடக்கிற
கூரைக்குக் கீழை
எங்கடை பள்ளி

எங்களைப் போலை
ஏழைப் பிள்ளையள்
படிக்கினம் அங்கை.

நாலு பாட்டாலும்
பணத்தைக் கண்டவை
எங்கடை பள்ளி
உதவா தெண்டு
பட்டணம் பாத்துப்
படிக்கப் போகினம்.

கடை விழியுக்கை
கண்ணீர் வடிய
வாத்தியார் வருவார்!
எங்களைப் போலை
அவரும் நல்லா
முட்டுப் பட்டவர்.

எங்கடை பசியும்
அழுக்கும் வறுமையும்
சாம்பலாப் போகும்
பசுமைப் பாடம்
சொல்லித் தருவார்.

மண்ணைப் பிரட்டி
மாத்தி யுழுவம்
எங்கடை வயிறு,
நிறையிற விதையள்
வளரவேணும்.

## சதுப்புநிலங்கள்

சதுப்பு நிலங்களிற்
சமர் புரிகின்றோம்.
வெல்பவர் யாரோ!
வீழ்பவர் நாங்கள்.

எங்களுக் கிந்தச்
சதுப்பு நிலங்கள்
குத்தகையாகக்
கொடுக்கப்பட்டன

நாமே அரசர்
நாமே ஆள்வோர்—
கேட்க இனிதாய்க்
குலவும் ஒலிகள்.

கந்தலாடையுங்
கடனுந் தனியும்
எங்கள் சொத்து

எங்களுக்குள்ளே
சமர்புரிகின்றோம்.

## வசந்தமலைகளை நோக்கி

தூரத்தே நெடு மலைகள்
நெளி நெளியாய்த்
தெரிகிறன—
நீலக் கசிவு
கருமையிலே தோய்கின்ற
குன்றுத் தொடர்கள்
கோடுகளாய் தெரிகிறன.

பசுமை குடிகொள்ளும்
பசுங்காற்றுப் பெட்டகங்கள்.
இலைகள் சுகங்கண்டு
எழுதுகின்ற கடிதங்கள்
குன்றுகளைக் கீறிக்
குமைகின்ற நீர்த்துளிகள்
அங்கே வசந்தம்
அயராது குடிகொள்ளும்.

நொய்ந்து மெலிந்த
உடம் போடு
இரு விழியுங் கூச
நோக்கு கின்றோம்
அந்த நெடுமலையை

அந்தப் பசிய
நெடுந் தொலைவு
விருட் சங்கள்

கண்ணுக் கினிதாய்த்
தெரிகிறன.

ஆனாலும்,
அந்த முடக்குக்கு
அப்பால்—
பாதை நெடுந்தொலைவாய்ப்
போகிறது.

## காய்த்தது, ஆனால்

எத்தனை நாளாய்த்
தண்ணீர் விட்டும்
இப்படித் தான் ஒரு
பிஞ்சு வந்தது.

செம்மண் நிலத்தைத்
துருவித் துருவி
சிண்டு முடியச்
சிலிர்த்த மரத்தில்
ஒரு பிடி பசுமை
குடை நிழல் பிடிக்கும்.

குழைகள் மெல்ல
வளர்ந்து வளர்ந்து
விருந்தை போலக்
குடைந்து நின்றது.

கருமை சுண்டிய
பசிய இலைகள்
சவர அலகாய்ச்
சிந்திடு மசைவு.

ஒருநாள் அந்தப்
பலாவின் கையில்
இப்படித்தான் ஒரு
பிஞ்சு வந்தது.

எத்தனை நாளாய்
விட்ட உழைப்பு
பூவாய்ப் பிஞ்சாய்க்
காயாய் வளரும்
என்ற கனவுப்
புள்ளிகள் நின்றன.

புதிதாய் வந்த
பிஞ்சுப் பூவோ
கேள்விக் குறியாய்
நின்றது பலகால்

# திருவிழா

திரு விழாவின்
மின்மினிகள்
தெருக் கரையிற்
புதுப் பெட்டிக்
கடை மினுங்கும்.
தெரு வீதித்

தட்டிக்குள்
முயல் போன்ற
வெண் சோளச்
சுடு கடலை—
மணம் பரப்பும்.

பகலிரவாய் அரைகின்ற
ஒலி நாடா
பக்கத்து ஆண்டிகளைத்
தூக்கத்தில் ஆழ்த்தியது.

போர்த்தலுக்குள்ளிருந்து
பாய்கின்ற பழரசமாய்ப்
புத்தம் புதிய
கார்வந்து நிற்கிறது,

சிற்றின்பப்பாடலினைச்
சிந்தியது ஒலிநாடா.

வீதிகளை மூடும்
வில்வடிவப்
பந்தலின் கீழ்
ஆண்டிகள் அயர்ந்திருக்க
அசைகிறது ஒலிநாடா.

## இலையுதிர் காலம்

எங்க ளூரில்
இலையுதிர் காலம்
எத்தனை கொள்கைகள்
நிலத்திற் சாய்ந்தன.

பொலிவை யிழந்து
பழுத்த இலட்சியம்
குவிந்து குவிந்து
குப்பையாய் மீளும்.

அறிவின் தளிர்கள்
அளித்தவ ரின்று
வரண்டும் வாடியும்
வெய்யில் காட்டினர்.

நிழல்கள் இழந்த
நெடு வழியோரம்
நீட்டிக் குறுகி
நிற்கும் கிளைகள்.

விடைகள் துறந்து
விதியைக் கூவும்—
எங்க ளூரில்
இலை யுதிர் காதம்.

ஓகோ! இந்த
அறிஞ ரெல்லாம்
ஒழிப்பர்,
மீண்டும் துளிர்ப்பர்.

## வல்லினங்கள்

எங்கள் மண்ணில்
நன்ருய்க் கால்பதித்து,
வேரோடி வேரோடி
ஆழ்ந்த அடித்தளத்தில்
அசையாது கட்டமைக்கும்
புதுயுகத்தின் குரலே
பூத்துக் கனிதருவாய்.

பானைகளின் கீழே
பொங்கும் நெருப்பைப்
புனைந்து மலராக்கி
எங்கள் இதயத்தின்
இருளைக் கலைத்தற்குக்
கைதந்த தத்துவமே
கவினுலகைப்
பார்க்கின்றேன்.

உருளைகளாய்ச்
சில்லுகளாய்
உருண்டோடும் காவியத்தின்

நடைமுறையைக்
கண்டறிந்தாய்.
நடைமுறையின்
நாயகர்கள்
நாங்களென விடையளித்தாய்!

துருப்பிடித்த
இரும்படுக்கைச்
சூலேகளில் இடுகின்ற
வரம்வேண்டும் வரம்வேண்டும்
விரைந்தளிப்பாய்.

எங்கள் சிற்றூரின்
ஏக்கங் கவலேக்ளே
அள்ளி அலசி
அடித்தோடும்
அடை மழையாய்ப்
புதுயுகத்தின் குரவே
பூத்துக் கனிதருவாய்

# அரைநித்திரை

எங்க ளூரின் குடிசைகள்
உக்கி விழுந்த விடங்களில்
ஓடுகள் வைத்த
ஓரிரு வீடுகள் எழுந்தன.

புளியடி முடக்கிற்
புதிதாய் வந்த
ஒளிவிடு கம்பம்
செக்கலிற் சிரித்தது.

பசியும் தவிப்பும்
சுரண்டலும் சோகமும்
மெது மெதுவாக
விரித்தன பாயை.

எங்களூரின் குடிசைகள்
அரைத்துயில் கொண்டன.

## மகமும் புலமும்

வெண் கலத்தின்
ஒலி கரைக்கும்
வேல் முருகன்
மணிக் கோயில்
கண்ணுறங்காக்
காலையிலே
கரைகிறது
காதுகளில்.

மண் தெரியா
இருளுக்குள்
மண் வெட்டி
நீர் மாற
எண்ணங்கள்
கரைந் தோடி
எச்சத்தில் மீள்கிறது.

குளிர் காலைக்
கும்மிருட்டிற்
குடங்கிய தோர்

மனதுக்குள்
சுழிவிட்டுக் கிடக்கின்ற

குறை வாழ்க்கை.
குப்பைக்குள் நெளிகின்ற
பாம்பாகிக்
குமைச்சல்கள்
தலை நெளிக்கும்—
அமைதிக்கும்
சாந்திக்கும்
பெருங் கேள்வி எழுகிறது.

உழைப்பை அறுக்கின்ற
அவலத்தின்
இருப்பிடத்தைத் துளாவ,
நீர் வந்து
பாத்திகளில் நிறைகிறது

# மழையே வந்தாய்

கிளு கிளு வென்று
கைகளை உயர்த்திப்
பனைகளைப் கீறிப்
புகுந்தது தூறல்.

சருகுகள் மழையிற்
சதங்கைகள் வீச
சோ வெனப் பாய்ந்து
சரிந்தன துளிகள்.

பருவ இருமல்
பாயை விரிக்க
ஓகோ! மழையே
நீயும் வந்தாய்.

ஒருகாற் சிறங்கி
ஒருகாற் குவிப்பாய்
நாமோ அந்தப்
பழைய பாதையில்
நலுங்கி நின்றோம்.

## தெருப் பாடகர்

நடு நிசியிற் கண்ணுறங்காக்
கீதங்கள் இசைத்தீர்கள்.
அதிகாலை சென்றவுடன்
அவிழ்த்து விட்ட பகலொளியில்
அக்கினியின் சுவாலைக்கு
அசையாது குரல் தந்தீர்!

அடுக்கடுக்காய் நிரைநிரையாய்ப்
பெருக் கெடுக்கும் துணைமாந்தர்
அயற் கூறாய் நிற்கின்றார்
அவரோடு இணையுங்கள்.

நசிபட்டு நலுக்கடைந்து
நாம் செல்லும் பாதைகளிற்
கணக்கற்று நிற்போர்க்குக்
குரல் கொடுத்துப் பாடுங்கள்.

தெருக்கரையிற் புதுமழைக்குத்
தலை நீட்டுஞ் சிறுகோரைப்
புல்லிதழும்
புதுமைக்கு நெகிழ்கிறது.

## புத்திசீவி

சிந்தனை மரங்கள்
பழங்களை உதிர்க்காதோ—
என்று ஏங்கிய வேளை.

பொத்துப் பொத்தென
தரையில் விழ்ந்தன—
சருகுகள்!

சூழல்
வெம்மைச் சவுக்குடன்
சிரித்தது.

## சிங்காசனம்

அவரிடமிருந்த
அளவு கோல்கள்
ஒற்றைப் பாதையின்
ஒடிந்த கோல்கள்

அவரே தலைவர்
திண்ணைக் குந்தில்.

அணுவிலிருந்து
ஆடற் கலைவரை
புதிய புதிய
வசந்த முதிரும்
அறிவின் உலகம்
அமுத சுரபி.

அவரிட மிருந்த
அளவு கோல்கள்
செம்மைப் படாது
சரிந்து கிடக்கும்.

அவரே தலைவர்
திண்ணைக் குந்தில்.
அவரின் அளவில்
அடங்கா தவற்றை
மடக்கிப் பிய்த்து
மடிக்கும் பெருமை

அறியார் சிலர்க்கு
அற்புத ரசனே.

புதிது புதிதாய்
அறிவுப் படையல்
உலகின் ஊட்டச்
செழுமை பாய்ச்ச,
திண்ணைக் குந்தின்
சிங்கா சனங்கள்
உலகை யிழந்து
ஒருமை கொள்ளும்.

## பாடம்

சவர அலகின் கூர்மையில்
தத்துவம் சொன்னவர்
மெல்லிதாய் வந்த
காற்றைப்
பொறுக்க முடியாது,
அறுந்த பட்டமாய்ப்
போனார்.

மண்ணில்
ஆழ்ந்த வேரில்
நின்ற மரங்கள்
காற்றை யெதிர்த்துக்
குறும்புகள் காட்டின.

அந்த நிழலிற்
பரட்டைத் தலைச் சிறுவர்
பாடங்கற்றனர்.

## தெரு மாடுகள்

வெற்றிலை யடுக்கிய
தட்டம் போல
விருந்தை யெங்கும்
பூஞ்செடி நின்றது.

மதிற் கரையோரம்
மலர்ந்த செடிகளும்
எதிர்க் கரையோரம்
உலர்ந்த கிழுவையும்.

மாரி மழையின்
மணித்துளி வீழ்ந்த
கிழுவை மரமும்
கிழிந்த இலைகளும்.

ஒல்லி மாடு
ஓடும்போது
வில்லு வில்லாய்
எலும்பு வளைந்தது.

## உணர்ச்சி நதிகளே

உணர்ச்சி நதிகளே
ஓர் நொடியில் வற்றி
உலர்ந்து விட்டீர்கள்

காகிதப் புல்வெளியிற்
கற்பனைப் பெருக்கெடுத்துப்
போலித்தனத்தைப்
பிரித்தறிய முடியாது
ஓங்காரமாக
ஒலித்துப் பாய்ந்தீர்கள்!

சில்லறை யுணர்வுக்குச்
சீற்றங் கொண்டீர்கள்!

இன்றோ—
வற்றியுலர்ந்து
வெறும் மணலாய்
நிற்கின்றீர்.
மீண்டு மொருகால்
மழை வந்து பாய்ந்து

படுக்கை நனைந்து பொழிய
நியாய அணைக் கட்டில்
நெடு நேரந் தங்குங்கள்.
மானிலத்துச் சத்தியங்கள்
மேன்மையுறப்
பெருக் கெடுங்கள்.

## தனிவழி

நொண்டித்
தென்னை மரங்களின்
அடியில்,
அம்மி யரைக்கும் விதமாக
அலை வந்து வீசும்.

அதைப் பார்த்துக்
குந்திக் கிடக்கும்
பாறை மடிக்குள்
அலைவந்து
சிறு பிள்ளையாட்டம்
கல் வீசும்.

அந்தக் கிராமத்தில்
மங்கல் மாலை
பூனைக் கண்
ஒளிக் கம்பம்
பாரத்தைச் சுமக்கும்
மனிதர்.

ஒட்டி யுறவா
ஒற்றைத்
தனிப் போக்கால்
வாழ்க்கை ஒடிந்து
துண்டுகளாய்த்
தூளாய்ச்
சிந்திவிட்டதனிமை.

# ஆசிரியரைப் பற்றிச் சில வரிகள் . . . . .



இணுவிலைச் சேர்ந்த சபாரத்தினம் தம்பதிகளின் புதல்வனான திரு. சபா. ஜெயராசா அவர்கள் பள்ளி மாணவனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் கற்கும் பொழுதே எழுத்துத்துறையில் ஆர்வங்கொண்டு உழைத்தார். இவர் தமது நண்பர்களுடன் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கத்தை நிறுவினார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற் கல்வி கற்கும் பொழுது இலக்கிய முயற்சிகள் யாவற்றிலும் ஈடுபட்டு உழைத்தார். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர், தமது உயர் கல்வி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள வேளையிலும், இலக்கியத்துறையில் ஆழ்ந்த கவனஞ் செலுத்தி வருகின்றார். உழைப்பவர் உலகின் எழுச்சிக்கு இவரது இலக்கியங்கள் பள்ளியெழுச்சி பாடுகின்றன.

—கலாநிதி

விசயா அச்சகம்
209, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.